இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 22.07.2026

# டெல்லியில் மாபெரும் போராட்டம்!

‘நீட்’ தேர்வு மிகமிக மோசடியானது, கொடூரமானது என்பதை முதலில் உணர்ந்து அதற்கு கடுமையான எதிர்வினையை ஆற்றிய அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தத் தேர்வு 2016 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் எதிர்த்து வருகிறது. ‘இவர்களுக்கு வேறு வேலை இல்லை’, ‘ஒன்றிய அரசு எதைச் சொன்னாலும் இவர்கள் அதனை எதிர்ப்பார்கள்’ என்று அப்போதெல்லாம் பதில் சொல்லி வந்தார்கள் சிலர். இதோ ஒன்று ஒட்டுமொத்த இளைஞர், மாணவர் சமுதாயமே நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கி விட்டது.

**‘நீட்’ தேர்வு என்பது கோச்சிங் செண்டர்கள் கொள்ளை அடிப்பதற்காக உருவாக்கப்பட்ட தேர்வு முறை. இதன் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டவர்கள் தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இது ஒரு பக்கம்.**

இந்த தேர்வையாவது முறையாக நடத்துகிறார்களா என்றால் இல்லை. வட மாநிலங்களில் வினாத்தாள் கசிவது ஆண்டுதோறும் நடக்கிறது. லட்சக் கணக்கான பணத்துக்கு வினாத்தாள் விற்பனை ஆகிறது. ஆள்மாறாட்டமும் நடக்கிறது. சிபி.ஐ. விசாரணையில் சிக்கி சில மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது போன்ற முறைகேடுகளை ஒன்றிய பா.ஜ.க. அரசால் தடுக்க முடியவில்லை.

தேர்வை ரத்து செய்து மறுபடியும் நடத்துவதைப் போன்ற வன்முறை இருக்க முடியுமா? அதையும் கூச்சமில்லாமல் செய்கிறார்கள்.

‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வேண்டும், அல்லது தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லி தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு மதிக்கவே இல்லை. குப்பைக் கூடைகளுக்குள் போய்விட்டது.

இவை அனைத்தையும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவத்துடன் நிராகரித்தார். தமிழ்நாட்டையும் மக்களையும் அரசியல் தலைவர்களையும் கொச்சைப்படுத்தி நாடாளுமன்றத்தில் பேசினார் தர்மேந்திர பிரதான். ‘நீட்’ தேர்வுக்கான எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் எழுப்பியதன் மூலமாக ஒட்டுமொத்த இந்தியாவுக்கே இத்தேர்வின் கொடூரத்தை விளக்கியது தி.மு.கழகம்.

இதைத்தான் இப்போது கையில் எடுத்துள்ளார்கள் இளைஞர்கள், மாணவர்கள். கரப்பான்பூச்சி ஜனதா கட்சி என்ற அமைப்பு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி விலகச் சொல்கிறது.

**‘நீட்’ தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், இது போன்ற தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், இத்தேர்வு முறையால் தற்கொலை செய்து கொண்ட மாணவர்கள் குடும்பத்துக்கு ஒரு கோடி ரூபாய் தர வேண்டும்** என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் 20ம் தேதி முதல் டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இவர்களது போராட்டத்துக்கு சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் ஆதரவு தெரிவித்தார். உண்ணா விரதம் தொடங்கினார். அவரது உடல்நிலை கடந்த 18 ஆம் தேதியன்று மிகவும் மோசமானது. வலுக்கட்டாயமாக அவரைத் தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்தது டெல்லி காவல் துறை. இவரது போராட்டம் இந்தியா முழுமைக்கும் கவனத்தை ஈர்த்தது.

நேற்றைய தினம் (ஜூலை 20) அன்று நாடாளுமன்றத்தை நோக்கி அவர்கள் பேரணியாகச் செல்ல இருந்தனர். நாடாளுமன்றம் கூடும் நாள் என்பதால் இவர்கள் பேரணியை தடுக்க அனைத்து வகையிலும் முயற்சித்தது காவல் துறை. இணையத்தள சேவைகளை முடக்கியது அரசு. நாடாளுமன்ற வளாகத்துக்குள் இளைஞர்கள் வருவதைத் தடுக்க முக்கியமான ஐந்து மெட்ரோ ரயில் நிலையங்களை பூட்டினார்கள். ஆனாலும் சாலைகள் வழியாக ஜந்தர் மந்தர் பகுதிக்கு இளைஞர்கள் குவியல் குவியலாக வந்து விட்டார்கள். நாடாளுமன்றத்தை நெருங்க விடாமல் இரும்பு வேலி அமைக்கப்பட்டு இருந்தது. அதை தாண்டினார்கள் இளைஞர்கள். அவர்கள் மீது தண்ணீர் பீச்சி அடிக்கப்பட்டது. அப்போதும் இளைஞர்கள் முன்னேறினார்கள்.

**நாடாளுமன்றத்தை ஒட்டிய ரயில் பவன் பகுதிக்கே இளைஞர்கள் முன்னேறி வந்தததும் தடியடி நடத்தியது காவல் துறை. பலருக்கும் ரத்தம் ஒழுகியது. குண்டுக்கட்டாக அவர்களை தூக்கிச் சென்றது போலீஸ். எந்த நேரமும் நாடாளுமன்ற வளாகத்துக்குள் அவர்கள் நுழையலாம் என்ற நிலை ஏற்பட்டது. எனவே நாடாளுமன்றத்தில் வெளிப்புற நுழைவு வாயில்கள் அனைத்தும் மூடப்பட்டது. கண்ணீர் புகை குண்டுகளை வீசியது காவல் துறை. இதன் பிறகு தான் கூட்டம் ஓரளவு கலைந்தது. பேச்சுவார்த்தை நடத்த இறங்கி வந்தது பா.ஜ.க. அரசு.**

போராட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே பேச்சுவார்த்தை நடத்தி இருக்க வேண்டும் அரசு. இளைஞர்களும், மாணவர்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வேகமாக இருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகுதான் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறது பா.ஜ.க. அரசு. சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி பொறுப்பாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இரண்டு மணி நேரம் தங்களை காக்க வைத்தார் அமைச்சர் என்று அக்கட்சியினர் குற்றம் சாட்டி இருக்கிறார்கள். தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், தற்கொலை செய்து கொண்ட மாணவர் குடும்பத்துக்கு ஒரு கோடி தர வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்துள்ளது இக்கட்சி. ஒன்றிய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகச் சொல்லி இருக்கிறார் ஜே.பி.நட்டா.

**“தர்மேந்திர பிரதான் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும். மீண்டும் நாடாளுமன்றம் நோக்கி போராட்டம் நடக்கும்”** என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சி அறிவித்துள்ளது. நேற்றைய போராட்டத்தில் போலீஸார் நடத்திய தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு சம்பவங்களில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயம் அடைந்துள்ளதாகவும், 70 மாணவர்களை டெல்லி போலீஸார் கைது செய்துள்ளதாகவும் அக்கட்சி சொல்கிறது. எனவே அவர்கள் போராட்டம் தொடர இருக்கிறது.

இளைஞர்கள்தான் எங்கள் மீது முதலில் கல்வீசினார்கள் என்று பொய் சொல்லி அவர்கள் மீது அராஜகமான தாக்குதலை காவல் துறை நடத்தி இருப்பது கண்டிக்கத்தக்கது. லத்திகள் வீசுவதாலோ, கண்ணீர் புகை போடுவதாலோ மக்கள் போராட்டங்களை அடக்கி விட முடியாது.

**‘நீட்’ தேர்வை முழுமையாக ரத்து செய்வது தான் போராட்டக்காரர்களின் முழுமுதல் கோரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் அரசுக்கு வைக்கும் கோரிக்கையானது முழுமையானதாக அமைய வேண்டும்.**

●●

# இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தைக் கைவிடுக!

## ஒன்றிய அரசை வலியுறுத்தி – டெல்லி நோக்கி ஆயிரக்கணக்கான விவசாயிகள் பேரணி!

புதுடெல்லி, ஜூலை 22 - தலைநகர் டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் போராட்டத்தை தொடர்ந்து விவசாயிகளும் போராட்டத்தில் குதித்தனர். இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை கைவிடக்கோரி டெல்லி நோக்கி விவசாயிகள் மாபெரும் பேரணி நடத்தினர்.

டெல்லியை முற்றுகையிடு வதற்காக பஞ்சாப் மாநிலத்தி லிருந்து ஆயிரக்கணக்கான டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் விவசாயிகள் டெல்லியை நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

இதனால், விவசாயிகள் டெல்லிக்குள் நுழையாமல் தடுப்பதற்காக ஷம்பு எல்லையில் முள்வேலி, தடுப்புகளை வைத்து துணை ராணுவம் மூடியது.

ஷம்பு எல்லையில் நூற்றுக்கணக்கான துணை ராணுவப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், டெல்லி நோக்கிய விவசாயிகள் பேரணியை, ஹரியானா - டெல்லி எல்லையில் போலீசார் தடுத்து நிறுத்தினர்.

இதனால், விவசாயிகளுக்கு போலீசாருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது.

இதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை போலீசார் கைது செய்தனர்.

ஒரு புறம் நீட் தேர்வு குளறுபடி விவகாரத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாணவர்களும், மறுபுறம் இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை கைவிடக்கோரி விவசாயிகளும் போராட்டத்தில் குதித்துள்ளதால், தலைநகர் டெல்லி ஸ்தம்பித்துள்ளது. போராட்டங்களால் டெல்லியில் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. கைது!

# த.வெ.க. அரசின் கைக்கூலியாக காவல்துறை செயல்படுவதா?

## முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!



**நெல்லை, ஜூலை 22 - “கழக சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயனை கைது செய்து த.வெ.க. அரசின் கைக்கூலியாக காவல்துறை செயல்படுவதா?” என்று முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தமிழக முதல்வர் கரூரில் பேசிய போது சட்டமன்றத்தில் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை ஓட விடாமல் கதவை அடைப்போம் என்றதால் தங்களை தாக்க முற்படுவது போல் உணர்ந்த மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ, அதற்கான பதிலாக கோவில்பட்டி பொதுக் கூட்டத்தில் பேசினார்.

அதற்காக த.வெ.க பொறுப்பில் இருக்கும் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் புகார் மனு பெற்று வழக்கு பதிவு செய்து காலை 7:00 மணிக்கு கைது செய்து 13 மணி நேரம் காவல் துறையினர் விசாரிப்பதற்கு எந்த அவசியமுமில்லை. சட்டப்படி 41A நோட்டீஸ் கொடுத்து விசாரிக்காமல் கைது செய்தது கண்டிக்கத்தக்கது!

100 கோடி ரூபாய் பழனி முருகன் கோவில் சொத்தை அரசு அதிகாரிகள் துணையோடு தனியாருக்கு பத்திர பதிவு செய்தவர்களை இதுவரை கைது செய்யாத காவல் துறை எதிர்க்கட்சி யினரை பழிவாங்கும் நோக்கத் தோடு கைது செய்து சிறையில் அடைப்பதும், செய்தி சேகரிக்க வந்த பத்திரிகையாளர்களை நாக்கை துருத்தி நாக்கூசும் வார்த்தைகளால் மிரட்டியதும் கண்டனத்திற்குரியது!

தமிழக காவல்துறை சட்டப்படி செயல்படாமல் த.வெ.க வின் கைகூலியாக செயல்படுவதை வன்மையாக கண்டிக்கிறேன்!

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

## த.வெ.க. அரசு எத்தனை பேரை சிறை வைக்கும்?

# வழக்குப் போட்டு தி.மு.க.வை அழிக்கலாம் என்று நினைத்தால் அது முடியாது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



*சென்னை, ஜூலை 22 - தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று அளித்த பேட்டி வருமாறு: -*

*விளாத்திக்குளம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் முதல்வர் விஜய்யை அவதூறாக பேசியதாக கூறி கைது செய்துள்ளனர். இதுபோன்ற அச்சுறுத்தல்களை எல்லாம் கண்டு பயப்படுகின்ற கட்சி அல்ல தி.மு.க. ஜனநாயகத்தில் சகிப்பு தன்மை வேண்டும், விமர்சனங்களை ஏற்றுக் கொள்கிற மனப்பான்மை வேண்டும். இன்றைக்கு இருக்கக் கூடிய ஆட்சிக்கு அது அறவே இல்லை என்பதை இந்த 60 நாளில் நிரூபித்து விட்டார்கள்.*

*தி.மு.க. எம்.எல்.ஏ. அனிதாராதாகிருஷ்ணன் பேசினார். உடனே அவர் கைது செய்யப்பட்டார். இவர் இரண்டாவது எம்.எல்.ஏ. கைது செய்யப்படுகிறார்.*

*அதாவது இது எதைக் காட்டுகிறது என்றால், மற்ற கட்சியில் இருந்தெல்லாம் எம்.எல்.ஏ.க்களை பல்வேறு வகையில் கட்சி மாற்றி அவர்கள் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் தி.மு.க.வில் இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் வைரம் போன்ற தொண்டர்களாக இருக்கிற காரணத்தினால் அவர்களை மாற்றி கட்சியில் சேர்க்க முடியாது என்பதற்காக இப்படிப்பட்ட வழிகளை இந்த அரசு கையாளுகிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய அளவுக்கு இந்த நடவடிக்கை இருக்கிறது.*

*நாங்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்க கூடியவர்கள். ஆகவே சட்ட ரீதியாக அதை சந்திப் பதற்கு தி.மு.க. தயாராக இருக்கிறது. அவர் அப்படி பேசி இருந்தா வழக்கு போடலாம். வழக்கை நீதிமன்றத்தில் நடத்தலாம். கைது செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆக மன உளைச்சலைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் தி.மு.க.வினர் கைது செய்யப்படுகிறார்கள்.*

*எங்களை மட்டும் அல்ல சமூக வலைதளங்களில் கருத்து போடுபவர்களை கூட காவல்துறை கைது செய்கிறது.*

*அதேபோல நெறியாளர் விஜயனை இந்த காவல்துறை விசாரணை என்ற பெயரில் அத்துமீறி நடந்துள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை பார்க்காதது, இதெல்லாம் இப்போது நடக்கிறது.*

*ஆனால் அதே நேரத்தில் கொலையும் கொள்ளையும் பாலியல் வன்கொடுமையும் தினம் தினம் நடந்து கொண்டிருக்கிறது. காவல் துறைக்கு அந்த வேலை பார்ப்பதற்கு நேரமில்லாமல் தி.மு.க.வையும் இந்த ஆட்சியை விமர்சிக்கிறவர்களையும் கைது செய்து கொண்டுள்ளது. எவ்வளவு பேரை கைது செய்து சிறை வைக்க முடியும்.*

*இதற்கு முன்பெல்லாம் அவதூறு பேச்சிற்காக யாரும் கைது செய்யப்பட்டதில்லை. உண்மைகளை பேசுகிற போது அது ஏற்றுக் கொள்கிற மனப்பான்மை இருக்க வேண்டும்.*

*இனியாவது தன்னை திருத்தி கொள்ளவேண்டும். தி.மு.க. மீது வழக்குப் போட்டு ஜெயிலுக்கு அனுப்பி அழிச்சிடலாம்னு நினைச்சா அவனை விட உலக மகா மடையன் யாரும் இருக்க முடியாது. ஆகவே இதுபோல எத்தனை வழக்குகள் போட்டாலும் சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் இது அரசாங்கத்துக்கும் மக்களுடைய வரிப்பணத்துக்கும் வீணான செலவு என்பதுதான் எங்களுடைய கருத்து.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## திருவள்ளூர் அருகே காக்களூரில்

# 40 ஆண்டுகளாக வாழ்வாதாரம் நடத்தி வந்த வியாபாரிகளை விரட்டும் த.வெ.க. அரசு?

## முன்னறிவிப்பின்றி ஜே.சி.பி.யுடன் வந்த அதிகாரிகள்; “வியாபாரிகளை வஞ்சிக்கும் ஆட்சி” என கண்டனம்!



*திருவள்ளூர், ஜூலை 22;*

*திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் பகுதியில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மருந்தகம், உணவகம் மற்றும் பல்வேறு சிறு வணிக நிறுவனங்களை நடத்தி வந்த வியாபாரிகள் தங்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நம்பி தொழில் செய்து வந்துள்ளனர். மேலும், அந்தக் கடைகள் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் அன்றாட தேவைகளையும் பூர்த்தி செய்து வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இந்த நிலையில், தமிழக வெற்றி கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கிய நபர்களின் தூண்டுதலின் பேரில் அரசு அதிகாரிகள் அப்பகுதிக்குச் சென்று, கடைகளை காலி செய்ய வேண்டும் என்று கூறி, வியாபாரிகளிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.*

*அதனைத் தொடர்ந்து, எந்தவித முன்னறிவிப்பும், உரிய அவகாசமும் வழங்காமல் ஜேசிபி இயந்திரங்களுடன் அதிகாரிகள் கடைகளை அகற்றும் நடவடிக்கையில் திடீரென ஈடுபட்டதால் காக்களூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.*

*இதையடுத்து, அங்கிருந்த வியாபாரிகளும் பொதுமக்களும் அதிகாரிகளை முற்றுகையிட்டு, “எந்த அறிவிப்பும் வழங்காமல், பல ஆண்டுகளாக இயங்கி வரும் கடைகளை இடிக்க உத்தரவிட்டது யார்? ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் இந்த அவசரம் ஏன்?” என்று கடும் கேள்விகளை எழுப்பினர். பொதுமக்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறியதாக கூறப்படுகிறது.*

*இந்தச் சம்பவம் தொடர்பாக, சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டிய அரசு, அவர்களையே அச்சுறுத்தும் வகையில் செயல்படுவதாகவும், பொதுமக்களை வஞ்சிக்கும் அணுகுமுறையையே த.வெ.க. அரசு கடைப்பிடித்து வருவதாகவும் வியாபாரிகள் மற்றும் அப்பகுதி மக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.*

*இந்தச் சம்பவம், சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கத் தவறிய ஆட்சியின் செயல்பாட்டை வெளிப்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன. முன்னறிவிப்பு, மாற்று ஏற்பாடு அல்லது உரிய சட்ட நடைமுறைகள் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.*

# தமிழ்நாடு பட்ஜெட் - ஆகஸ்ட் 5ல் தாக்கல்!

## சட்டப்பேரவைத் தலைவர் அறிவிப்பு!




*சென்னை, ஜூலை 22 - 2026-2027ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5 ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும் என பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்துள் ளார்.*

*இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது,*

*“2026-2027 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை ஆகஸ்ட் 5ஆம் தேதி காலை 10 மணிக்கு பேரவையில் தாக்கல் செய்யப்படும்.*

*மேலும், ஆகஸ்ட் 6 ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.*

*பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அலுவல் ஆய்வுக் கூட்டம் நடக்கும். அதில் பட்ஜெட் மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப் படும் என்று கூறினார்.*